பக்கங்கள் 15

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 11 ஞாயிற்றுக்கிழமை 29.10.2023 அதிர்வு 90

## ஏமாற்றமடைந்த டலஸ் சஜித் அணியுடன் பேச்சு

எதிர்க்கட்சிகளின் பொது அரசியல் கூட்டணியை உருவாக்கி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி உட்பட பிரதான எதிர்க்கட்சிகளுடன் பேச்சு நடத்தவுள்ளதாக 04▶

# மேலும் 37 இந்திய மீனவர்கள்

# இலங்கைப் படையால் கைது!

## தமிழகத்தில் கொந்தளிப்பு; டில்லிக்குக் கடும் அழுத்தம்



– எஸ். நிதர்ஷன் –

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 37 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 23 மீனவர்களை மூன்று படகுகளுடன் கைது செய்த கடற்படையினர், அவர்களைத் தலைமன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

அதேவேளை, நேற்று மாலை நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மேலும் 14 மீனவர்களை இரண்டு படகுகளுடன் கைது செய்த கடற்படையினர் அவர்களை மயிலிட்டித் துறைமுகத்துக்கு அழைத்துச் சென்றனர். 04▶

## பொன்சேகாவின் பதவியை பறிக்கத் தயாராகும் சஜித்





ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை அக்கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து நீக்குவதற்கான ஆயத்தம் 04▶

## போதையில் வாகனம் செலுத்திய முன்னாள் பொலிஸ் உயர் அதிகாரி

### வெள்ளவத்தையில் கைதான அவருக்கு

### நவம்பர் 1ஆம் திகதி வரை விளக்கமறியல்



மதுபோதையில் வாகனம் செலுத்தி விபத்து ஏற்படுத்தியமை தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் 04▶

# வயோதிபர் அடித்துப் படுகொலை!

### முல்லைத்தீவில் கொடூரம்

### இராணுவச் சிப்பாய் கைது





- சண்முகம் தவசீலன் -

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் வயோதிபர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைவேலி, மயில்குஞ்சன் குடியிருப்பில் நேற்று இரவு 11 மணியளவில் 04▶



# மட்டக்களப்பில் ரணிலின் வருகையின் போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 40 பேர் மீது வழக்கு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பிற்கு கடந்த 7 ஆம், 8 ஆம் திகதி ஜனாதிபதி விஜயம் செய்த போது செங்கலடி மற்றும் மட்டக்களப்பு நகரில் அவருக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இந்நாள், முந்நாள்நாடாளுமன்ற உறுப்பினர்கள் பௌத்த தேரர்கள், மற்றும் கால் நடை பண்ணையாளர்கள் அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் உட்பட 40 பேருக்கு எதிராக நீதிமன்ற கட்டளையை மீறி வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ் ஏறாவூர், மட்டக்களப்பு நீதிமன்றங்களில் கடந்த வெள்ளிக் கிழமை வழக்குத்தொடர்ந்துள்ளதாக அந்தந்த பொலிஸ் நிலையப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 7 ஆம் திகதி ஜனாதிபதி மட்டக்களப்பு சாந்தா புனித மிக்கேல் ஆண்கள் தேசிய பாடசாலை 150 வருட நிறைவு விழாவிற்கும் 8 ஆம் திகதி செங்கலடி மத்திய மகாவித்தியாலய 149 வருட நிகழ்வுகளிலும் பிரதம அதிதியாக கலந்துகொண்டு வருகை தந்திருந்தார்.

இந்த நிலையில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மட்டு மேய்ச்சல் தரை பண்ணையாளர்கள் தமது மேய்ச்சல் தரையில் இருந்து சட்டவிரோத குடியேற்றவாசிகளை வெளியேற்றுமாறு கோரி ஒருபுறமும், அந்த பகுதியில் சட்டவிரோதமாக குடியேறிய சிங்கள மக்கள் தமக்கு அந்த நிலம் வேண்டும் என கோரி ஒரு புறமாகவும் ஜனாதிபதிக்கு எதிர்ப்பு தெரிவித்து வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப் போகிறார்கள் என்று குறிப்பிட்டு அதற்குத் தலைமை தாங்குபவர்களுக்கு தடை உத்தரவு வழங்குமாறு நீதிமன்றத்தில் பொலிஸார் கோரினர்.

ஆனால் நீதிமன்றமமோ வீதிகளை மறித்து, பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்காமல் ஆர்பாட்டத்தில் ஈடுபடுவதற்கு அனுமதித்ததுடன், அதனை மீறி வீதியை மறித்து, பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்து, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டால் போக்குவரத்து விதிமுறையின் கீழ் அவர்களுக்கு எதிராகப் பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுக்கலாம் எனக் கட்டளை வழங்கியது.



இந்த நிலையில் 7 ஆம் திகதி ஜனாதிபதி மிக்கேல் கல்லூரிக்கு வருகை தந்திருந்த போது அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மட்டு. விகாராதிபதி அம்பிட்டிய சுமணரட்ண தேரர் தலைமையிலான – மயிலத்தமடு மாதவனை மேச்சல் தரையின் சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் கொண்ட குழுவினர் கல்லூரிக்குள் புகுவதற்கு முயற்சித்த போது அவர்களைப் பொலிஸார் வீதித் தடைகளை ஏற்படுத்தித் தடுத்து நிறுத்தியமையுடன் நீதிமன்றக் கட்டளையை தெரிவித்த நிலையில், அதனையும் மீறி வீதியை மறித்து அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அவ்வாறே 8 ஆம் திகதி செங்கலடி மத்திய மாகாவித்தியாலயத்துக்கு ஜனாதிபதி வருகைதந்திருந்த போது அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்பாட்ட ஊர்வலத்தில் ஈடுபட்டவர்களை செங்கலடி – வாழைச்சேனை பிரதான வீதி கொம்மாந்துறை விநாயகர் வித்தியாலயத்துக்கு அருகில் பொலிஸார் வீதிதடையை ஏற்படுத்தி தடுத்து நிறுத்தியபோது, அவர்கள் வீதியை மறித்து பண்னைணயாள்கள், இன்னால் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிவில் அமைப்பினர், அரசியல்வாதிகள், நீதிமன்ற கட்டளையை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நீதிமன்ற கட்டளைகளை அவமதித்து, பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் 7ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அம்பிட்டிய சுமணரட்ன தேரர் மற்றும் இரு தேரர்கள் உட்பட 6 பேருக்கு எதிராக மட்டு. தலைமையகப் பொலிஸார் மட்டக்களப்பு நீதிவான் நீதின்றில் வழக்குத் தாக்குதல் செய்து, அவர்களிடம் வாக்குமூலம் பெற்று, அவர்களை எதிர்வரும் 27 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பானை வழங்கினர்.

அதேவேளை நீதிமன்றக் கட்டளையை மீறி 8 ஆம் திகதி வீதியை மறித்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியேந்திரன், ஞா.சிறிநேசன், சீ.யோகேஸ்வரன், தமிழ்தேசிய மக்கள் முன்னணி கட்சியின் சட்டத்தரணி சுகாஸ், தேசிய அமைப்பாளர் த.சுரேஸ், வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத் தலைவி மற்றும் பண்ணையாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர் உட்பட 34 பேருக்கு எதிராக ஏறாவூர் பொலிஸார் வழக்குத் தாக்தல் செய்து அவர்களிடம் வாக்கு மூலங்கள் பெற்று, அவர்களை எதிர்வரும் 17 ஆம் திகதி ஏறாவூர் சுற்று நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதிமன்ற அழைப்பாணையை வழங்கியுள்ளனர்.

இவ்வாறு இரு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 40 பேருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு தொடர்பாக அவர்களிடம் வாக்கு மூலங்களை பெறும் விசேட நடவடிக்கை ஒன்றை நேற்று முன்தினம் சனிக்கிழமை பொலிஸார் ஆரம்பித்து அவர்களை வீடுவீடாக தேடி வாக்கு மூலங்களை பெற்றுக் கொண்டு அவர்களுக்கு நீதிமன்ற அழைப்பானைகளை வழங்கும் நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றனர்.

# தேர்தலின் பின்னர் தொங்கு அரசு உறுதி

## 113 ஆசனங்களை எந்தக் கட்சியாலும் பெற முடியாது என்கிறார் ஷான் விஜேலால்

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் எந்தவொரு கட்சியாலும் அறுதிப் பெரும்பான்மையைக் கூட (113) பெற முடியாத சூழ்நிலையே காணப்படுகின்றது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் ஷான் விஜேலால் தெரிவித்தார்.

எனவே, தற்போதையதை விடவும் குழப்பகரமான தொங்கு அரசே அமையக்கூடும் எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –



"அடுத்த தேர்தல்களில் கூட்டணி அமைப்பது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இன்னும் முடிவெடுக்கவில்லை. கூட்டணி அமைப்பது தொடர்பில் கட்சிக்குள் கருத்து வேறுபாடுகள் உள்ளன. எனினும், மக்கள் மற்றும் கட்சிக்கு நன்மை பயக்கும் வகையில் எமது முடிவு அமையும்.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் பல அணிகள் இருப்பதால் வாக்குகள் பிரிந்து செல்லும். எந்தவொரு கட்சியாலும் 75 ஆசனங்களுக்கு மேல் கைப்பற்ற முடியாத நிலையே ஏற்படும். ஆட்சி அமைப்பதற்காகக் கூட்டு சேர வேண்டும்." – என்றார்.



## பேராசிரியராகப் பதவி உயர்வு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பணியாளர் திறன் விருத்தி மையத்தின் பணிப்பாளரும், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஆர். விஜயகுமாரன் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இதற்கான ஒப்புதலைப் பல்கலைக்கழகப் பேரவை நேற்று வழங்கியது. பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று சனிக்கிழமை காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமையத் திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்த கலாநிதி ஆர். விஜயகுமாரனின் விண்ணப்பத்தை மதிப்பீடு செய்த மூதவையினால் விதந்துரைக்கப்பட்ட துறைசார் நிபுணர்களின் மதிப்பீட்டு அறிக்கை, நேர்முகத் தேர்வு முடிவுகள் ஆகியன பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், பணியாளர் திறன் விருத்தி மையத்தின் பணிப்பாளரும், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் நிதி முகாமைத்தவத் துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஆர். விஜயகுமாரன் நிதி முகாமைத்தவத்தில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

## நீர் தொட்டியில் விழுந்து 14 வயதுச் சிறுவன் சாவு



**(அப்துல்சலாம் யாசீம்)**

திருகோணமலை – எத்தாபெதந்தி வெவ பகுதியில் நேற்று இரவு நீர் தொட்டியில் விழுந்து சிறுவ னொருவன் உயிரிழந்துள்ளான்.

இவ்வாறு உயிரிழந்த சிறுவன் அதே பகுதியைச் சேர்ந்த சனுக பாசன (14வயது) எனவும் தெரிய வருகின்றது.

சம்பவம் குறித்து தெரிய வருவ தாவது:–

இந்தச் சிறுவனின் தாய் உயிரிழந்து விட்டார். தந்தை பிள்ளைகளை விட்டுச் சென்று வேறு இடத்தில் வசித்து வரு கிறார். சிறுவன் தனது மாமாவின் வீட்டில் வாழ்ந்து வந்தான். வேளாண்மை செய் வதற்காக நீர் தொட்டியில் நெல் போடப்பட்டிருந்ததாகவும் அதற்குள் இறங்கி விளையாடிக்கொண்டிருந்த போது விழுந் துள்ளான் எனவும் தெரிய வருகின்றது.

சிறுவனுக்கு ஏற்கனவே வலிப்பு நோய் இருப்பதாகவும், தொட்டியில் விளையாடிக் கொண்டிருந்த போது வலிப்பு நோய் ஏற்பட்டிருக்கலாம் எனவும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

சிறுவனின் சடலம் பிரேத பரிசோத னைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப் பட்டது. மரணம் தொடர்பிலான விசார ணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**பொன்சேகாவின்...**

மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனத் தெரியவருகின்றது.

சரத் பொன்சேகாவை நீக்கிவிட்டு அந்தப் பதவிக்குக் கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவரை நியமிக்க கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆலோசனை நடத்தியுள்ளார்.

சரத் பொன்சேகா ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கைகளுக்கு எதிராகச் செயற்படுவதால் அவர் அப்பதவியில் இருந்து நீக்கப்பட்டு கட்சியின் பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றுமொரு சிரேஷ்ட உறுப்பினர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்படவுள்ளார் என்று கட்சியின் உள்ளக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில நாட்களாக ஐக்கிய மக்கள் சக்திக்குள் சரத் பொன்சேகாவுக்கு எதிரான கருத்துக்கள் வலுப்பெற்று வருகின்றன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்து பல்வேறு இரகசிய நகர்வுகளில் சரத் பொன்சேகா ஈடுபட்டுள்ளதாலேயே கட்சிக்குள் பொன்சேகாவின் பதவியைப் பறிக்க வேண்டுமென்ற கருத்து வலுப்பெற்றுள்ளது.

முன்னிலை சோசலிசக் கட்சியுடன் பொன்சேகா நெருங்கிய தொடர்பைப் பேணி வருகின்றார் என்று பொன்சேகாவுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**ஏமாற்றமடைந்த...**

நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

டலஸ் அழகப்பெரும தலைமையில் பேச்சுகளை முன்னெடுக்கவும், சுயேச்சையான தீர்மானங்களை எடுக்கவும் சுதந்திர மக்கள் சபை கட்சியின் உயர்பீடத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலோ அல்லது பொதுத் தேர்தலிலோ எதிர்க் கட்சிகளின் பொதுக் கூட்டணியுடன் போட்டியிடுவது தொடர்பில் சுதந்திர மக்கள் சபை கவனம் செலுத்தியுள்ளதுடன் அதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கையாக இந்தப் பேச்சுகள் ஆரம்பிக்கப் படவுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும ஐக்கிய மக்கள் சக்தியுடன் முன்னெடுக்கவுள்ள கலந்துரையாடலின் பின்னர் கூட்டணியின் முன்னேற்றம் மற்றும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து சுதந்திர மக்கள் சபைக்கு அறிவிப்பார் என அக்கட்சி அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளில் பொது வேட்பாளராகக் களமிறங்க வேண்டுமென்ற நிலைப்பாட்டில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும, அதற்காக சுதந்திர மக்கள் சபை என்ற கட்சியை உருவாக்கியுள்ளதுடன் எதிர்க்கட்சிகளுடன் பல கட்ட பேச்சுகளையும் நடத்தியுள்ளார்.

இருப்பினும் சஜித் பிரேமதாஸவே எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம் என்று ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

அதற்கு டலஸ் அணியுடனான பேச்சுக்குத் தயார் என்று ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ள நிலையிலேயே டலஸ் தலைமையிலான அணி ஐக்கிய மக்கள் சக்தியுடன் பேச்சுகளை ஆரம்பிக்கவுள்ளது.

**வயோதிபர்...**

இந்தக் கொடூர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த 71வயதுடைய தம்பிப்பிள்ளை மார்க்கண்டு என்ற குடும்பஸ்தரே அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் அதே பகுதியில் வசித்து வரும் 31 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கேப்பாப் பிலவு இராணுவ முகாமில் பணியாற்றி வருகின்றார் எனவும், அவர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் என்றும் ஊர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

பணப் பரிமாற்றம் தொடர்பான தகராறால் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியுள்ளது.

இதன்போது சந்தேகநபர் பொல்லாலும், கோடரியாலும் வயோதிபர் மீது சரமாரியாகத்தாக்குதல் நடத்தியுள்ளார். அத்துடன் வயோதிபரின் வீட்டு வாசலையும் சந்தேகநபர் அடித்துச் சேதப்படுத்தியுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த வயோதிபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

தாக்குதல் மேற்கொண்ட சந்தேகநபரான இராணுவச் சிப்பாயைப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தாக்குதல் சம்பவத்தில் சந்தேகநபரும் காயமடைந்துள்ளமையால் அவர் பொலிஸ் பாதுகாப்புடன் சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**போதையில் வாகனம்...**

ரவி செனவிரத்ன விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ரவி செனவிரத்னவை கஸ்கிஸை நீதவான் நீதிமன்றில் இன்று ஆஜர்படுத்திய போது, அவரை நவம்பர் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

வெள்ளவத்தை பகுதியில் மெரின் டிரைவ் வீதியில் மதுபோதையில் வாகனம் செலுத்தி 2 வாகனங்களுக்கு விபத்தை ஏற்படுத்திய சம்பவம் தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸாரால் நேற்று இரவு இவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**மேலும் 37 இந்திய மீனவர்கள்...**

இம்மாதம் 14ஆம் திகதியில் இருந்து நேற்று (28) மாலை வரை எல்லை தாண்டி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் இந்தியாவின் தமிழகத்தைச் சேர்ந்த 64 மீனவர்கள் பத்து படகுகளுடன் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான 64 இந்திய மீனவர்களும் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தமிழகத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் கைதான மீனவர்களை விடுவிக்கக் கோரும் தமிழகத்தின் அழுத்தங்களும் இந்திய மத்திய அரசு மீது அதிகரித்துள்ளன.








# காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் அரசின் நேர்மைத்தனத்தை வெளிப்படுத்த வலியுறுத்து

## தெற்கில் காணாமலாக்கப்பட்டவர்கள் ரத்தொலுவயில் நினைவு கூரப்பட்டனர்





வடக்கிலும் தெற்கிலும் ஆரம்பிக்கப்பட்ட ஆயுதக் கிளர்ச்சிகளின் போது இடம்பெற்ற பாரியளவிலான கடத்தல்கள் வரலாற்று ரீதியாக தீர்க்கப்படாத ஒரு நாடாக இலங்கையை சுட்டிக்காட்டும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு, ஜே.வி.பி காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் அரசு ‘சிரத்தையுடன்’ இருந்தால், 87-89 காலப்பகுதியில் ஒவ்வொரு மாவட்டத்திலும் செயற்பட்ட மாவட்ட இராணுவ ஒருங்கிணைப்பாளர்களின் பெயர்களை அது பகிரங்கப்படுத்த வேண்டும் என அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

தென்னிலங்கையில் உள்ள உறவினர்கள் காணாமல் போனவர்களை நினைவுகூரும் முக்கிய நாளான ஒக்டோபர் 27ஆம் திகதியன்று சர்வதேச உண்மை மற்றும் நீதி செயற்றிட்டம் (ITJP) விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்களின் குடும்பங்கள் தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்வதற்காக கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக போராடிவந்துள்ள நிலையில், உண்மையை நிலைநாட்டுவதிலும் பொறுப்புக்கூறலை ஏற்படுத்துவதிலும் இலங்கை அரசு தான் சிரத் தையுடன் செயற்படுகின்றது என்பதை வெளிப்படுத்த வேண்டிய நேரம் வந்து விட்டது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை, காணாமல் போனவர்களின் குடும்பச் சங்கத்தின் தலைவர் மனித உரிமைச் செயற்பாட்டாளர் பிரிட்டோ பெர்னாண்டோ அவர்களின் முயற்சியால், தென்னிலங்கைச் சிங்களத் தாய்மார்கள் 33ஆவது தடவையாக சீதுவ ரத்தொலுவையில் நிர்மாணிக்கப்பட்ட நினைவுத் தூபிக்கு முன்பாக தமது அன்புக்குரியவர்களை நினைவு கூர்ந்தனர்.

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவினர்களுக்கு நீதி கிடைக்கும் வரை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் படம் பொறிக்கப்பட்ட மாலையை (chain with pendant) அணிந்துகொள்வதாக, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அன்று நினைவுத்தூபிக்கு முன்பாக உறுதியளித்துள்ளனர்.

தென்னிலங்கையில் காணாமல் போன உறவினர்கள் மற்றும் உறவுகளின் நினைவாக முப்பது வருடங்களுக்கும் மேலாக நடைபெற்று வரும் உண்மைக்கான நீண்டதும் வேதனை தருவதுமான உண்மைக்கான தேடல், 2009இல் போரின் முடிவிலிருந்து இவர்களைபோலவே ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுவரும் பல்லாயிரக்கணக்கான தமிழர்களுக்கு ஓர் எச்சரிக்கையாகவே இருப்பதாக அந்த ஊடக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

“பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களைச் சுற்றியுள்ள உண்மையை மீட்டெடுப்பது என்பது, அரசாங்கம் சர்வதேச சமூகத்தை மகிழ்ச்சியாக வைத்திருக்க இந்த பிரச்சினையை கையாள்வதாக பாசாங்கு செய்து கொண்டு, ஆனால் உண்மையில் காணாமல் போனவர்களின் பெற்றோர்கள் இறக்கும் வரையும் - இந்தப் பிரச்சினை மறையும் வரையும் - காத்திருக்கும் பரிகசிக்கத்தக்க செயற்பாடாக இருக்க முடியாது.” என சர்வதேச உண்மை மற்றும் நீதி செயற்றிட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா கூறியுள்ளார்.

போரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் 188 தமிழ்ப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் தொடர்பான உண்மைகளைத் தெரிந்துகொள்வதற்கு முன்னதாக ஏற்கனவே உயிரிழந்துள்ள அதே வேளையில், வடக்கிலும் கிழக்கிலும் நடந்த போராட்டங்களில் அல்லது நினைவேந்தல்களில் பங்குபற்றிய இளைஞர்களை வாயடைக்கச் செய்வதற்காக அவர்களைக் கடத்திச்சென்று சித்திரவதை செய்யும் நடவடிக்கையும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

ஏராளமான கடத்தல்கள் வரலாற்று ரீதியாக தீர்க்கப்படாமல் இருக்கும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். மக்கள் விடுதலை முன்னணியின் ஆயுத கிளர்ச்சி மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான உள்நாட்டுப் போருடன் தொடர்புடைய சம்பவங்கள் இதில் உள்ளடங்கும் என உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்றிட்டம் வலியுறுத்தியுள்ளது.

“சர்வதேச நியமங்களுக்கும் நெறிகளுக்கும் அமையவும், உள்நாட்டில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அமையவும் உண்மைகளைத் தெரிந்துகொள்ளும் தார்மீக உரிமை பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு உண்டு.ஆனால், இப்பிரச்சினைகள் தொடர்பாக, குறிப்பாக ஏற்கனவே விரிவான விசாரணைகள் நடாத்தப்பட்ட ஜே.வி.பி. காணாமற்போனமை தொடர்பாக, விசாரணை மேற்கொள்வதற்கென சிறிலங்கா அரசாங்கம் தொடர்ச்சியான ஆணைக்குழுக்களை அமைப்பது காணாமற்போனவர்களின் குடும்பங்களுக்கு எந்தவொரு நீதியையோ அல்லது ஆறுதலையோ கொண்டுவரமாட்டாது,” என யஸ்மின் சூக்கா மேலும் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம், ஜே.வி.பி. காலப்பகுதியில் இடம்பெற்ற காணாமல் போதல்கள் தொடர்பில் சிரத்தையாக இருக்குமாயின், கீழே தரப்பட்டுள்ள நடவடிக்கைகளை உடனடியாக அது செயற்படுத்தவேண்டும்:-

- ஐ.நா. பணிக்குழு, மற்றும் நீதிக்குப் புறம்பான, முழுமையான விசாரணைகளற்ற, ஏதேச்சதிகாரக் கொலைகள் தொடர்பான சிறப்புத் தூதுவர் மற்றும் உண்மை, நீதி, இழப்பீடு, மீள இடம்பெறாமல், நடைபெறாமல் இருப்பதை உத்தரவாதங்களை மேம்படுத்துவதற்கான சிறப்புத் தூதுவர் ஆகியோரால் 1989 மாத்தளை மாவட்ட இராணுவ ஒருங்கிணைப்பாளரின் வகிபாகம் தொடர்பாக 2022 நவம்பரில் எழுதிய கடிதத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு உடனடியாகப் பதில் வழங்குதல்.
- 1987 -1990 இடைப்பட்ட காலப்பகுதியில் கடமையாற்றிய ஒவ்வொரு மாவட்ட இராணுவ ஒருங்கிணைப்பாளர்களதும் பெயர்களை வெளியிடுதல்.
- இக்காலப்பகுதியில் வலிந்து காணாமல் ஆக்கும் நடவடிக்கையில்

**(7ஆம் பக்கம் பார்க்க)**

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நித்திய கண்ட உறவு

நிறைவேற்றதிகாரத்தை வைத்துக்கொண்டு எதையும் செய்வேன் என்ற மமதையில் ஆடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒருபுறமும் -

அவரை அந்த அதிகாரத்துக்கு கொண்டு வந்து விட்டு, அவரைக் கட்டுப்படுத்த முடியாமல், நிலத்தில் ஓடிய அணில் மரம் ஏறும் வரும் வரைப் பார்த்திருந்து விட்டு அதற்குப் பின்னர் மரத்தை அண்ணாந்து பார்த்து குலைக்கும் 'அணில் ஏற விட்ட நாய் போல' ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது கொதிக்கும் மொட்டுக் கட்சியினர் மறுபுறமுமாக-

ஆளும் தரப்பில் அரசியல் சூடு பறக்கிறது.

பொதுஜன பெரமுன எம்.பிக்களின் ஆதரவில் அரசை அமைத்திருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது கட்சியுடன் இணைந்து, கூட்டணி தர்மத்தைப் பேணி, ஆட்சியைக் கொண்டு நடத்தாவிட்டால் ரணில் சமர்ப்பிக்கும் இந்த வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடிக்கப் பின்நிற்க மாட்டோம் என்று மொட்டுக் கட்சி மிரட்டுகின்றது.

துணிச்சல் இருந்தால் வரவு - செலவுத் திட்டத்தைத், தோற்கடித்து இந்த அரசைக் கவிழ்த்து, பொதுத் தேர்தலுக்கு வழி செய்யுங்கள் என்று ரணில் தரப்பும் பதிலுக்கு மிரட்டுகின்றது.

உண்மையில் எது நடந்தாலும், இரண்டு தரப்புகளுக்குமேதான் பாதிப்பு.

இப்போது ஒரு பொதுத் தேர்தல் வருமானால் மொட்டுக்காட்சி தற்சமயம் தன்னிடம் இருக்கும் நாடாளுமன்றப் பெரும்பான்மையை அடியோடு இழக்கும் என்பது உறுதி. ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் வலுவான வாக்குகள் கிடைப்பதற்கான சாதகமான நிலைமை இல்லை.

அதேசமயம் ரணிலின் வசம் தற்போதுள்ள நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவி இன்னும் ஆகக் கூடியது ஒரு வருடத்திற்குத்தான். அதற்குப் பின்னர் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வென்றால்தான் அவருக்கு வாய்ப்பு.

தாம் அடுத்து எதிர்நோக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் வேறு தேசியத் தேர்தல் ஏதும் நடத்தப்படுமானால், அதன் முடிவு வரும் ஜனாதிபதி தேர்தலில் தனது வெற்றி வாய்ப்பை மண்ணாக்கி விடும் என்ற கருத்தில் செயற்படும் ரணில் விக்கிரமசிங்க, அதனால்தான் உள்ளூராட்சித் தேர்தலுக்கே ஆப்படித்தார்.

அப்படி இருக்கையில் அடுத்த வருடம் பிற்பகுதியில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்படுமானால் அது ரணிலின் அரசியல் அதிகாரத்தை இந்தப் பதவிக் காலத்துடன் முடிவுக்கு கொண்டு வந்து விடும்.

அதாவது, என்ன காரணத்துக்காகவும் அடுத்த வருடம் நடைபெற வேண்டிய ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் தேசிய மட்டத்தில் வேறு எந்தத் தேர்தலையும் சந்திக்க விரும்பாத ரணில் அதன் காரணமாக பொதுத் தேர்தலையும் முற்கூட்டியே நடத்த இடமளிக்க மாட்டார் என்பது உறுதி.

ஆகவே, மொட்டுக் கட்சியும் ரணிலும் இப்போது முரண்பட்டு, ஒருவர் காலை மற்றவர் வாருவது இரண்டு இரண்டு தரப்புகளுக்குமே பின்னடைவான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் அந்த கால்வாரல் வேலைக்கு இருவரும் போக மாட்டார்கள். மாறி, மாறி சகதி வீசும் வாய்ச்சவடால் மோதலுடன் இந்த முரண்பாடு அடங்கிவிடும் என்பது திண்ணம். 'நித்திய கண்டம் பூரண ஆயுசு'என்ற கணக்கில் அடுத்த ஜனாதிபதி தேர்தல் வரை அந்த உறவு நீடிக்கும்.



## 104 கிலோ கேரளக் கஞ்சாவுடன் 2 பேர் வட்டுக்கோட்டையில் கைது

யாழ்ப்பாணம் – வட்டுக் கோட்டை பகுதியில் சுமார் 104 கிலோ கேரள கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள் ளனர்.

ஓட்டோ ஒன்றில் இன்று அதிகாலை இந்த சந்தேகநபர்கள் கேரள கஞ்சாவுடன் பயணித்தபோது கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கைதான இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் இருவரும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.



## மஸ்கெலியாவில் மாயமான மூன்று மாணவர்களும் மீட்பு

### மட்டக்களப்பில் கண்டுபிடிக்கப்பட்டனர்

(செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா சாமிமலை பகுதியில் மாயமான பதினைந்து வயது மாணவர்கள் மூவரும் மட்டக்களப்பு பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டனர் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட சாமிமலை பகுதியில் உள்ள மூன்று தோட்டத்தில் உள்ள மூன்று மாணவர்களை நேற்று முன்தினம் பகல் முதல் காணவில்லை என மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முற்சிப்பாடு செய்யப்பட்டிருந்தது.

சாமிமலை 200 ஏக்கர் தோட்டத்தை சேர்ந்த ரவிச்சந்திரன் மனோஜ், சாமிமலை கொழும்பு தோட்டத்தை சேர்ந்த காளிமுத்து புலேந்திரன், சாமிமலை ஸ்ரஸ்பி தோட்ட தெய்வகந்தை பிரிவைச் சேர்ந்த பி.துஷாந்தன ஆகியோரையே காணவில்லை என பொலிஸ் நிலையத்தில் அவர்களின் பெற்றோர்கள் புகார் பதிவு செய்தனர்.

இவர்களைத் தேடும் முயற்சியில் பெற்றோர்கள், உறவினர்கள் மேற்கொண்டு வந்த போது மட்டக்களப்பு பகுதியில் அவர்கள் வேலை தேடி கொண்டு உள்ளனர் எனத் தகவல் கிட்டியதைத் தொடர்ந்து சிறுவர்களின் பெற்றோர்கள் மட்டக்களப்புப் பகுதிக்குச் சென்று அவர்களை அழைத்து வந்து உள்ளனர் என மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

இந்த மாணவர்கள் மூன்று பேரும் சாமிமலை பகுதியில் உள்ள பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் எனத் தெரியவந்துள்ளது.




(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட பொலிஸ், இராணுவம் மற்றும் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கு எதிராகப் பரிந்துரைக்கப்பட்ட நீதிமன்ற வழக்குகள் மற்றும் குற்றவியல் குற்றச்சாட்டுக்களின் முன்னேற்றம் தொடர்பில் நாடாளுமன்றத்திற்குத் தெரியப்படுத்தல்.

● தற்போது 2030 வரை ஜனாதிபதியின் பாதுகாப்பின்கீழ் வெளியிடப்படாமல் வைக்கப்பட்டிருக்கும் ஜே.வி.பி. காலத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பான அகில இலங்கை மற்றும் வலயங்களுக்கான ஜனாதிபதி ஆணைக்குழுக்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிய வாக்குமூலங்களை வெளியிடுதல்.

உள்நாட்டுப் போரின் போதும் அதற்குப் பின்னரும் காணாமல் போனவர்கள் தொடர்பில் பொறுப்புக்கூறல் குறித்த சிரத்தை இருக்குமாயின், இலங்கை அரசாங்கம்பின்வரும்நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்திட்டம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது:-

● ஆள்கொணர்வு மனு வழக்கில் வழக்கறிஞர்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டதுபோன்று 2009 மே 18 இல் சரணடைந்தவர்களின் பட்டியலை ஒப்படைக்கும்படி 58ஆவது படைப்பிரிவுக்கு கட்டளையிடல்.

● வட்டுவாகல் பாலத்தில் வைத்து 2009 மே 18 இல் இராணுவத்திடம் சரணடைந்த சிறுவர்கள் உட்பட நூற்றுக்கணக்கான மக்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களால் கேட்டுக்கொள்பட்டது போன்று, சிறிலங்கா இராணுவத்தில் 58, 59, 53, டிவிசன்களின் பற்றாலியன்கள் மற்றும் சிறப்புப் படைகள் மற்றும் கொமாண்டோ ஜெறிமன்ட் ஆகியவற்றின் கட்டளைத் தளபதிகள் மற்றும் துணைத்தளபதிகள் ஆகியோர் காணாமற்போன ஆள்கள் தொடர்பான அலுவலகத்தால் நேர்காணலுக்கு உள்ளாக்கப்படுத்தப் படுகின்றார்கள் என்பதை உறுதிப்படுத்துதல்.

● (சனல் - 4 இன் படுகொலை காணொலி போன்ற) காணொலிகளில் படைவீரர்களின் முகங்கள் தெளிவாகத் தெரிகின்றன. இவர்களது படங்கள் இராணுவத்தினரின் விவரக்கோவைகளில் ஒப்பீட்டுப் பார்க்கப்பட்டன என்பதற்குரிய ஆதாரத்தினையும், அவர்கள் கண்டறிந்தவற்றையும் வழங்கமுடியுமா?

பல தசாப்தங்களுக்கும் மேலான வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பாரதூரமான நிலைமையினையும் - உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு என்னும் பெயரில் - அரசாங்கம் பிறிதொரு ஆணைக்குழுவினை அமைக்கும் நோக்கத்தினைக் கொண்டுள்ளது.

இதனால் மீண்டும் அறிவித்திருப்பதையும் கருத்தில்கொண்டு, ஐ.நா. உட்பட சர்வதேச சமூகமானது தங்களது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையைத் தெரிந்துகொள்வதில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் இருக்கும் உரிமையை நிவர்த்தி செய்வதில் அரசாங்கம் உண்மையான அர்ப்பணிப்புடன் இருக்கின்றதா என்பதைத் தீர்மானிப்பதற்கு மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இந்த ஆண்டு ஜூனில் ஐ. நா. செய லாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட நிலைமாற்று நீதியின் புதிய வழிகாட்டல் குறிப்பில் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் மீளவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.





# மட்டு. திமிலைதீவு டானியல் வீதி புனரமைத்துத் திறந்து வைப்பு!

(பழுவூரான்)

இரண்டு கோடி பத்து லட்சம் ரூபா செலவில் கொங்கிறீட் வீதியாக புனர மைக்கப்பட்ட – மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட – திமிலை தீவு டானியல் வீதியை கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரு மான சிவனேசதுரை சந்திரகாந்தனுடன் இணைந்து பெருந்தெருக்கள் போக்கு வரத்து இராஜாங்க அமைச்சர் ஸ்ரீபால கம்லத் மக்கள் பாவனைக்காகத் திறந்து வைத்தார்.

கிராமியக் குழுத் தலைவர் மதி ரூபன் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில், தமிழ் மக்கள் விடுத லைப் புலிகள் கட்சியின் பொதுச் செய லாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் தற்போதைய கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக செயலாளரு மான பூ.பிரசாந்தன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் லிங்கேஸ்வரன், கட்சி யின் இளைஞரணிச் செயலாளர் எஸ். சுரேஷ்குமார் உட்பட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.





# கட்டாக்காலி நாய்களின் தொல்லையால் மஸ்கெலியாவில் மக்கள் பெரும் பீதியில்

(செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள சாமிமலை, மஸ்கெலியா, நல்லதண்ணி ஆகிய நகரங்களில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

இதனால் நகரில் உள்ள அனைத்து மக்களும், பாடசாலை மாணவர்களும், நகருக்கு வரும் பாவனையாளர்களும் பீதியில் உள்ளனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதி காரிகள் உடன் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப் பகுதியில் உள்ள அனைத்து மக்க ளும் கோரிக்கை விடுக்கின்றனர்.






# பாடசாலையின் தோட்டத்தில் விளைந்த மரக்கறி அறுவடை!

## பட்டிருப்பு காக்காச்சிவட்டை விஷ்ணு ம.வியில்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

'பயிர் வளர்போம் பயன் பெறுவோம்' எனும் தொனிப் பொருளில் மட்டக்களப்பு மாவட்ட பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட் பட்ட காக்காச்சிவட்டை விஷ்ணு மகா வித்தியாலய அதிபர் பன்னீர்ச்செல்வம் சுகிதரனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் பாடசாலை வளாகத்தில் பயிரிடப்பட்டிருந்த பாடசாலை தோட்ட மரக்கறி பயிர்களின் அறுவடை கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

பாடசாலை மாணவர்கள் புத்தகக்கல்வியில் கவனம் செலுத்தும் அதே வேளை,ஓய்வு நேரங்களில் பொருளாதார ரீதியில் தம்மையும் குடும்பத்தையும் வளப்படுத்திக் கொள்ள புறக்கிருத்திய செயற்பாடாக பாடசாலை காலங்களிலே ஆசிரியர்களினால் சிறந்த முறையில் பயிற்சியளிக்கப்பட வேண்டும். அதனடிப்படையில் முனெடுக்கப்பட்ட பாடசாலைத்தோட்டத்தில் பயிரிடப்பட்ட மரக்கறிகள் அறுவடையில் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றமை விசேடஅம்சமாகும்.










# வாழைச்சேனை இந்துக் கல்லூரியின் நடைபவனி இன்று கோலாகலமாக!

கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட வாழைச்சேனை இந்துக்கல்லூரி தேசிய பாடசாலையின் பழைய மாணவர்களது நடைபவனி இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலையின் அதிபர் திருமதி. ரி.சுரேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற நடைபவனியில் பாடசாலையில் மூத்த கல்வியியலாளர்கள், பாடசாலையில் கடமையாற்றிய முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் எனப் பலர் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கேக் வெட்டப்பட்டு நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது. அத்துடன் பாடசாலையில் கடமையாற்றி மரணமடைந்த அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்களுக்காக மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இத்சியடுத்து வாழைச்சேனை இந்துக்கல்லூரி தேசிய பாடசாலையின் மைதானத்தில் இருந்து ஆரம்பமான நடைபவனி கல்குடா வீதி வழியாக வாழைச்சேனை பிரதான வீதி, முல்லை வீதி, விநாயகபுரம் வீதி வழியாக பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலய வீதி, பேத்தாழை மயான வீதி வழியாக பேத்தாழை கல்குடா வீதியினூடாக வருகை தந்து வாழைச்சேனை இந்துக் கல்லூரி தேசிய பாடசாலையை வந்தடைந்தது.

நடைபவனியில் வாழைச்சேனை இந்துக்கல்லூரி தேசிய பாடசாலையின் பாண்ட் மாணவர்களின் வரவேற்புடன், பாடசாலையின் கராத்தே மாணவர்கள், சுற்றாடல் பகுதி, மாணவ தலைவர்கள், சகிதம் பவனியாக கலந்து கொண்டனர்.

அத்தோடு 1996 ஆம் ஆண்டு உயர்தர பிரிவு மாணவர்கள் தொடக்கம் 2022 ஆம் ஆண்டு உயர்தர பிரிவு மாணவர்கள் வரையான மாணவர்களால் வாகனங்கள் கண்களை கவரும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தன. இசை முழங்க பழைய மாணவர்களின் வாசகங்கள் அடங்கிய பதாதைகளுடன் நடனமாடி பழைய மாணவர்கள் நடை பவனியில் கலந்து கொண்டனர்.

குறித்த நடைபவனியைப் பார்வையிடுவதற்கு பெரும்பாலான மக்கள் வீதியோரமாக குழுமி நின்றனர்.












# அம்பாறையில் பெரும்போக விதைப்பு வேலைகளில் விவசாயிகள் மும்முரம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தின் 2023 – 2024 ஆம் ஆண்டுக்கான பெரும் போக நெற்செய்கைக்கான விதைப்பு நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள் ளன.

அம்பாறை மாவட்டத்தில் நெல்லுக் கான கிராக்கி அதிகரித்துள்ள நிலையில் விவசாயிகள் மிகுந்த உடற்சாகத்துடன் வயலை உழுவதிலும்,விதைப்பதிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தின் பெரும் போக வேளாண்மைச் செய்கைக்கான ஏர் பூட்டுவிழா அண்மையில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் டீ.எஸ். சேனநாயக குளத்தருகில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இங்கினியாகல டீ.எஸ்.சேனநாயக சமூத்திரம் ஒரு இலட்சத்து 35 ஏக்கர் சதுர அடி நீர்மட்டம் காணப்படுகின்ற போதிலும் மழையை நம்பியே அம்பாறை மாவட்டத்தின் அனைத்து பிரதேசங்களி லும் பெரும்போக நெற்செய்கை மேற் கொள்ளப்படுகின்றது.

இம்முறை அம்பாறை மாவட்டத்தில் ஒரு இலட்சத்து இருபதாயிரம் ஏக்கரில் பெரும்போக வேளாண்மைச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப் பிடத்தக்க விடயமாகும்.



# கொழும்பு - பதுளை பிரதான வீதி முழுமையாக திறக்கப்பட்டுள்ளது

மண் சரிவு காரணமாக தடைப்பட்டி ருந்த கொழும்பு – பதுளை பிரதான வீதி யின் பெரகலைக்கும் ஹப்புத்தளைக் கும் இடைப்பட்ட பகுதி தற்போது முழுமையாக திறக்கப்பட்டுள்ளதாக ஹப்புத்தளை பொலிஸார் தெரிவிக்கின் றனர்.

இவ்வீதியின் மூன்று இடங்களில் மண்சரிவு ஏற்பட்டு அப்பாதையூடாக பயணிப்பது ஆபத்தானது என அடையா ளப்படுத்தப்பட்டதையடுத்து ஒரு வழிப் பாதையில் போக்குவரத்து மட்டுப்படுத் தப்பட்டது. இதனையடுத்து வீதி அபி விருத்தி அதிகாரசபையினர் இரவோடு இரவாக வீதியைச் சீர்செய்து போக்குவரத் துக்காக திறந்து வைத்தனர்.

நீண்ட விடுமுறை நாள்களில் வெளி மாநிலங்களில் இருந்து ஏராளமான வாகனங்கள் வருவதால், இவ்வீதியில் பயணிக்கும் போது கவனமாக இருக்கு மாறும், தூர காட்சிக்காக கட்டப்பட்டுள்ள கண்காணிப்பு மேடைகளில் நிறுத்தும் போது கவனமாக இருக்குமாறும் பொலி ஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்தி யுள்ளனர்.

இதேவேளை, மோசமான வானிலை காரணமாக பண்டாரவளை சிறுவர் பூங்கா இன்று தற்காலிகமாக மூடப்பட்டுள் ளதாக பண்டாரவளை மாநகர ஆணை யாளர் அறிவித்துள்ளார்.



# குறிகட்டுவான் விவகாரத்திற்குத் தீர்வு அமைச்சர் டக்ளஸ் நேரடி நடவடிக்கை

குறிகட்டுவான் இறங்குதுறையில் படகுகள் தரிப்பதில் காணப்பட்ட இட நெருக்கடிகளைச் சீர்செய்து ஒழுங்குபடுத்தியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நீண்ட ஆழ்கடல் பயணத்தை மேற்கொள்ளும் நெடுந்தீவு பயணிகள் படகுகளிற்கே இறங்கு துறையில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், நேர அட்டவணைப்படி சீராக இறங்கு துறையில் படகுகள் தரித்து மக்களுக்கு அசௌகரியமற்ற சேவை வழங்குவதை ஒழுங்குபடுத்தி உறுதிப் படுத்துவதற்காக இரண்டு கண் காணிப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். குறிக்கட்டுவான் இறங்குதுறையில் போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்ற படகுகள் தரிப்பதற்கு ஒழுங்கு முறைகள் பின்பற்றப்படாமையினால் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

குறிப்பாக, மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை மாத்திரம் பயன்படுத்தி போக்குவரத்தில் ஈடுபடுகின்ற நெடுந்தீவு மக்களும் அரச ஊழியர்களும் பாதிப்புக்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இதுதொடர்பாக, இறுதியாக நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறிகட்டுவானுக்கான கண்காணிப்பு விஜயத்தினை இன்று மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நெடுந்தீவு மற்றும் நயினாதீவு பயணிகள் படகு சேவை உரிமையாளர்கள், கடற்படை மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வரவழைத்து கலந்துரையாடி, தீர்மானங்களும் எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.







# வருமான வரி ஏய்ப்பு மற்றும் மோசடிகளை தடுப்பதற்கு விசேட தகவல் கட்டமைப்பு!

## டிசம்பர் மாதத்திலிருந்து செயல்படுமாம்

வருமான வரி ஏய்ப்பு மற்றும் மோசடிகளில் ஈடுபடும் வர்த்தகர்கள் மற்றும் நபர்களை கண்டறியும் நவீன தொழில்நுட்பத்திலான விசேட தகவல் கட்டமைப்பை எதிர்வரும் டிசம்பர் மாதத்திலிருந்து செயல்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி அலுவலக பிரதாணி சாகல ரத்நாயக்கவின் ஆலோசனைகளுக்கு அமைவாக இந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

சீரற்ற அணுகல் மேலாண்மை தகவல் கட்டமைப்பு ( Random Access Management Information System) என்ற தொழில்நுட்பத்தையே வருமான வரி ஏய்ப்பில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக அரசாங்கம் பயன்படுத்தவுள்ளது. தேசிய வருமான வரித் திணைக்களத்தின் கீழ் இந்த நவீன தொழில்நுட்பத் தகவல் கட்டமைப்பு செயல்படுத்தப்படும்.




வங்கிகள், சுங்கம் மற்றும் கலால் திணைக்களம் போன்ற அரச நிறுவனங்கள் இந்தத் தகவல் கட்டமைப்பின் கீழ் கண்காணிக்கப்படவுள்ளன. மேலும் இந்தத் தொழில்நுட்பத்தின் ஊடாக வரி வருமானத்தை எளிதாக சேர்த்துக் கொள்ள முடிவதுடன் வரி மோசடிகளில் ஈடுபடுபவர்களையும் அடையாளம் காண முடியும்.

எவ்வாறாயினும் இந்த திட்டம் பல வருடங்களுக்கு முன்பாகவே இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. பல அதிகாரிகள் வெளிநாடுகளுக்கு சென்று இந்தத் தொழில்நுட்பக் கட்டமைப்பு குறித்து பயிற்சிகளை பெற்று வந்திருந்தனர். ஆனால் துரதிர்ஷ்டவசமாக பல வேறு தடைகள் ஏற்பட்டு இது செயல்படுத்தப்பட முடியாமல் போனது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், மீண்டும் வருமான வரி மோசடிகளை தடுக்கவும் வரி வருமானத்தை அதிகரிக்கவும் வகையில் இந்தத் திட்டத்தை முன்னெடுக்க உத்தரவிட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கோமரங்கடவெல - மொரவெவ பகுதிக்கு திடீர் மரண விசாரைண அதிகாரி இல்லை

## அப்பகுதி மக்களுக்குப் பெரும் அசௌகரியம்

**(அப்துல்சலாம் யாசீம்)**

திருகோணமலை – கோமரங்கடவெல மற்றும் மொரவெவ பிரதேசத்தில் திடீர் மரண விசாரைண அதிகாரி ஒருவர் இன்மையால் அப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கோமரங்கடவெல மற்றும் மொரவெவ பிரதேச செயலாளர் பிரிவின்கீழ் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இப்பகுதியில் இடம்பெறுகின்ற அகால மரணங்களின்போது அவற்றை விசாரணை செய்ய திடீர் மரண விசாரணை அதிகாரி ஒருவர் இல்லாததன் காரணமாக சடலத்தை திருகோணமலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டியிருப்பதாகவும், இதனால் வறிய மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருவதோடு சடலத்தை அடக்கம் செய்யக் காலதாமதம் ஏற்படுவதாகவும் அப்பகுதி மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

அத்துடன் இறப்புச் சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கும் நீண்டகாலமாக அலைய வேண்டியிருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை வயது முதிர்ந்தோர், நோயாளர்கள் வீடுகளில் உயிரிழந்தால் கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக முன்னெடுக்கப்பட வேண்டிய இறப்பு அறிக்கையை கூட பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆகவே மொரவெவ – கோமரங்கடவல ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உடனடியாக திடீர் மரண விசாரணை அதிகாரியொருவரை நியமிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதியில் உள்ள மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ‘அவனுக்கும் சிறகுகள் உண்டு’ சிறுகதை நூல் வெளியீடு நாளை

இலங்கை வானொலி பிறை எவ். எம். அறிவிப்பாளரும் பல்துறைக் கலைஞருமான ஆசிரியர்

ஜே.வஹாப்தீன் எழுதிய ‘அவனுக்கும் சிறகுகள் உண்டு’ சிறுகதை நூல் வெளியீட்டு நிகழ்வு ஒலுவில் ஸஹீட் ஹாஜி இல்லத்தில் நாளை திங்கட் கிழமை மாலை 04.00 மணிக்கு ஒலுவில் மீடியா நெட்வேர்க் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது.

2022 கொடகே ஆக்க இலக்கிய போட்டியில் சிறந்த சிறுகதைப் பிரதியாக தேர்வு செய்யப்பட்ட இச்சிறுகதை நூல் வெளியீட்டு நிகழ்வில் விசேட உரையைப் பேராசிரியர் றமீஸ் அப்துல்லா, எழுத்தாளர் உமா வரதராஜன், கவிஞர் சோலைக்கிளி, பிறை எவ்.எம். பிரதிப் பணிப்பாளர் பஷீர் அப்துல் கையூம், பேராசிரியர் எஸ்.எம்.ஐயூப், கலாநிதி ஹனீபா இஸ்மாயில் விரிவுரையாளர், அப்துர் ரஸாக், அதிபர் யூ.கே அப்துர்ரஹீம் மற்றும் இலக்கிய ஆர்வலர், ஏ.எல்.முஹிதீன்பாவா உட்பப்பலரும் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

# இராமேஸ்வரம் மீனவர்கள் 37 பேர் கைது: இரக்கமற்ற செயல் என ராமதாஸ் கண்டனம்

கடந்த 12 நாட்களாக வேலை நிறுத்தம் மேற்கொண்ட இராமேஸ்வரம் மீனவர்கள், தங்களின் போராட்டத்தை முடித்துக் கொண்டு, நேற்றுதான் முதன்முறையாக மீன் பிடிக்கச் சென்றனர். அவ்வாறு சென்ற முதல் நாளிலேயே அவர்களில் 37 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது இரக்கமற்ற செயல் என்று பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வேதனை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், வங்கக்கடலில் 5 படகுகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் 37 பேரை சிங்களக் கடற்படையினர் கைது செய்து இலங்கை சிறையில் அடைத்துள்ளனர்.

இராமேஸ்வரம் மற்றும் தலைமன்னாரை அண்மித்த இந்திய பாரம்பரிய மீன்பிடிப்புப் பகுதிகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சிங்களக் கடற்படையினரின் இந்த தொடர் அத்துமீறல் கண்டிக்கத்தக்கது.

இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் 27 பேரை கடந்த 14 ஆம் திகதி சிங்களக் கடற்படை கைது செய்தது. அவர்களையும், இதுவரை பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் படகுகளையும் விடுவிக்க ண்டும் என்று வலியுறுத்தி கடந்த 12 நாட்களாக இராமேஸ்வரம் மீனவர்கள் வேலை நிறுத்தம் மேற்கொண்டனர்.

தங்களின் போராட்டத்தை முடித்துக் கொண்டு, நேற்றுதான் முதன்முறையாக மீன் பிடிக்கச் சென்றனர். அவ்வாறு சென்ற முதல் நாளிலேயே அவர்களில் 37 பேர் கைது செய்யப்பட்டிருப்பது இரக்கமற்ற செயல் ஆகும்.

தமிழக மீனவர்களை பழிவாங்க வேண்டும், மீண்டும் மீண்டும் கைது செய்வதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை முடக்க வேண்டும் என்பது தான் இலங்கை அரசின் நோக்கம் ஆகும். அதன் ஒரு கட்டமாக கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் விடுதலையை தாமதிப்பதற்காக புதிய உத்திகளை இலங்கை அரசு பயன்படுத்தத் தொடங்கியுள்ளது.



கடந்த 14 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் 27 பேரும் நேற்று விடுதலை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், அவர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதை இலங்கை அரசு திட்டமிட்டு தாமதம் செய்ததால், அவர்களின் காவல் மேலும் 14 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டிருக்கிறது. இதே உத்தியை இலங்கை அரசு தொடர்ந்து கடைபிடித்தால், மீனவர்கள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள்.

ஒருபுறம் மீனவர்களை கைது செய்து, அவர்களின் படகுகளை பறிமுதல்செய்தல், இன்னொருபுறம் தமிழக மீனவர்கள் மீது கடல் கொள்ளையர்களைக் கொண்டு தாக்குதல் நடத்துதல் என இருமுனைத் தாக்குதலை இலங்கை நடத்தி வருகிறது.

இதனால், தமிழக மீனவர்கள் தங்களின் வாழ்வாதாரத்தை இழந்து வருகின்றனர். இதேநிலை தொடர்ந்தால், இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களையும், புதுச்சேரி காரைக்காலையும் சேர்ந்த மீனவர்கள் வாழ்வாதாரங்களை இழந்து உள்ளூர் அகதிகளாக மாற வேண்டிய நிலை ஏற்படும்.

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் மற்றும் கைது நடவடிக்கைகள் தொடர்பாக மத்திய அரசுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதுவதால் மட்டுமே பயன் கிடைத்து விடாது.

தமிழக மீனவர்கள் அவர்களின் பாரம்பரிய மான மீன்பிடி பகுதிகளில் தடையின்றி மீன் பிடிப்பதை உறுதி செய்யுமாறு பிரதமர் நரேந்திர மோடியை, முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சந்தித்து வலியு றுத்த வேண்டும்.

மத்திய அரசும் அதன் பங்குக்கு, தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலையும், கைது நடவடிக்கைகளையும் கைவிடும்படி இலங்கை அரசை எச்சரிக்க வேண்டும்.

கைது செய்யப்பட்டுள்ள 37 மீனவர்கள் உட்பட இலங்கை சிறைகளில் வாடும் 64 மீனவர்களையும், இதுவரை பறிமுதல் செய்யப்பட்ட அனைத்து படகுகளையும் விடுவிப்பதற்கும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# தமிழக மீனவர்களை விடுவிக்க கோரி மத்திய அமைச்சருக்கு ஸ்டாலின் கடிதம்

மாலைதீவு கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழகத்தை சேர்ந்த 12 மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் விடுவிக்க விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில், தூத்துக்குடி மாவட்டம், தருவைகுளம் மீன் இறங்கு தளத்தில் இருந்து கடந்த 1 ஆம் திகதி



புறப்பட்ட விசைப்படகில் மீன்பிடிக்கச் சென்ற தமிழகத்தைச் சேர்ந்த 12 மீனவர்கள், கடந்த 23 ஆம் திகதி மாலைதீவுக்கு அருகே மாலைதீவு கடலோரக் காவல் படையினரால் எந்தவித முன்னெச்சரிக்கையும் இன்றி கைது செய்யப்பட்டுள்ளனர்.

உரிய தூதரக நடவடிக்கைகள் மூலம், மாலைதீவு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி, கைது செய்யப்பட்டுள்ள 12 மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவிக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# காசாவில் தொலைத்தொடர்பு சேவை பாதிப்பு: தரைவழித் தாக்குதலில் இஸ்ரேல் தீவிரம்!



காசா மீதான இஸ்ரேல் தாக்குதல் நாளுக்கு நாள் தீவிரமடைந்துவருகிறது. இந்த நிலையில், நேற்றிரவு நடத்தப்பட்ட இடைவிடாத தாக்குதல் காரணமாக அங்கு தொலைத்தொடர்பு சேவை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட காசா முழுவதும் தொடர்பு எல்லைக்கு அப்பால் செல்லும் சூழல் உருவாகியுள்ளது.

காசாவை நோக்கி நேற்றிரவு இஸ்ரேல் தீவிர தாக்குதல் நடத்தியது. இதனால் இஸ்ரேலின் தெற்கும் – காசாவின் வடக்கும் இணையும் எல்லையில் புகை மண்டலம் சூழ்ந்ததாக அங்குள்ள பத்திரிகையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் வடக்கு காசா தெற்கிலிருந்து தொலைத் தொடர்பு முற்றிலுமாக துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் போர் அத்துமீறல்கள் குறித்து எந்த உண்மையான நிலவரமும் வெளியில் தெரியாத சூழல் உருவாகலாம் என்று மனித உரிமைகள் கண்காணிப்பு குழு கவலை தெரிவித்துள்ளது.

தெற்கில் கான் யூனிஸ் மருத்துவ மனைக்கு மருந்து நிவாரணப் பொருள்கள் வந்து சேர்ந்தாலும் கூட, அது கடலில் கலந்து துளி போன்ற அளவிலேயே இருக்கின்றது என பத்திரிகையாளர்கள் அனுப்பிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

காசாவில் இஸ்ரேல் தாக்குதலால் தொலைதொடர்பு சேவை துண்டிக்கப் பட்டுள்ள நிலையில், அங்குள்ள மனிதநேய அமைப்புகள் தங்களின் சேவைகளைத் தொடர ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனர் எலான் மஸ்க் உதவிக்கரம் நீட்டியுள்ளார். ஐ.நா. அமைப்புகள், செஞ்சிலுவை போன்ற சங்கங்களின் தேவைக்காக ஸ்டார் லிங்க் மூலம் செயற்கைக்கோள் இணைய சேவை வழங்கப்படும் என்று எலான் மஸ்க் அறிவித்துள்ளார்.

ஏற்கெனவே உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியபோது உக்ரைன் தொலைதொடர்புக்கு எலான் மஸ்கின் ஸ்டார் லிங்க் சேவை வழங்கப்பட்டது .

ஹமாஸ் அமைப்பின் சுரங்கப் பாதைகள் உலகறிந்தவை. அந்த சுரங்கப் பாதைகள்தான் காசாவில் தரைவழித் தாக்குதலைத் தீவிரப்படுத்த இஸ்ரேலுக்கு இருக்கும் மிகப் பெரிய சவால் என்றும் கூறப்படுகிறது. இந்த நிலையில், ஹமாஸ் அமைப்பினர் மருத்துவமனைகளுக்குக் கீழ் இருக்கும் சுரங்கப் பாதைகளில் தஞ்சமடைந்து மக்களை நோயாளிகளைக் கேடயமாக வைத்து தப்பித்துவருகின்றனர் என இஸ்ரேல் குற்றம்சாட்டுகிறது. ஆனால், இந்தக் குற்றச்சாட்டு ஹமாஸ் திட்ட வட்டமாக மறுத்து வருகிறது.

ஹமாஸ் படையின் அப்துல் ரஹ்மான், கலீல் மஹ்ஜாஸ், மற்றும் கலீல் டெத்தாரி ஆகிய மூன்று துணைத் தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

அத்துடன், நேற்று ஹமாஸ் அமைப் பின் புலனாய்வு பிரிவின் துணைத் தலைவர் ஷாதி பாரூத்தை இஸ்ரேலிய பாதுகாப்பு படை கொன்றுள்ளது என தகவல் வெளியானது. காசாவில் நேற்று இரவு இஸ்ரேல் வான்வழித் தாக்குதலை நடத்தியிருக்கிறது. இந்தத் தாக்குதலில், ஹமாஸின் வான்வழிப் பிரிவின் தலைவரான இஸ்ஸாம் அபு ருக்பே கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேல் பாதுகாப்பு படை மற்றும் இஸ்ரேல் உளவு அமைப்பான ஷின் பெட் தெரிவித்திருக்கிறது.

இதேவேளை, இஸ்ரேல் தனது தரைவழித் தாக்குதலைத் தீவிரப்படுத்தும் சூழலில் இஸ்ரேல் பாதுகாப்பு துறை செய்தித் தொடர்பாளர் டேனிய ஹகாரி, களத்தில் இஸ்ரேலியப் படைகள் முன்னேறி வருகின்றன.

நாங்கள் வலுவிழந்த எதிரியை எதிர்கொண் டுள்ளோம் என்று தெரிவித் துள்ளார்.

ஆனால், ஹமாஸ் தரப்போ இஸ்ரேல் தரைவழித் தாக்குதலைத் தீவிரப்படுத்தினாலும் நாங்கள் அதை எதிர்கொள்ளும் திறனோடு இருக்கி றோம் என்று தெரிவித்துள்ளது. இது வரை 150 சுரங்கப் பாதைகளை அழித்துள் ளோம் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

# பங்களாதேஷ் பிரதமருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் தீவிர போராட்டம்!




பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவை பதவி விலக வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் நடத்திய போராட்டத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

பங்களாதேஷில் அடுத்த ஆண்டு ஜனவரியில் தேர்தல் நடைபெற உள்ளது.

இந்த நிலையில், அதற்கு முன்பாக இடைக்கால அரசை ஏற்படுத்தும் நோக்கில் பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலக வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசியவாத கட்சி வலியுறுத்தி வருகிறது. அப்போதுதான் தேர்தல் நியாயமாக நடைபெறும் என அது கூறி வருகிறது.

இதற்கு ஆளும் கட்சியான பங் களாதேஷ் அவாமி லீக் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இடைக்கால அரசு அமைக்கப்படுவதற்கு சட்டத்தில் இடமில்லை என உச்ச நீதிமன்றம் கூறி இருக்கிறது என பங்களாதேஷ் அரசும் தெரிவித்துள்ளது.

இதையடுத்து, டாக்காவின் அனைத்து வீதிகளிலும் அமைதிப் போராட்டம் நடத்த பங்களாதேஷ் தேசியவாத கட்சி அழைப்பு விடுத்தது. இதையடுத்து கடந்த சில நாட்களாக போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதில், ஷேக் ஹசீனா பிரதமர் பதவியை விட்டு விலக வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. இந்தத் தொடர் போராட்டங்கள் காரணமாக பொலிஸாருக்கும் பங்களாதேஷ் தேசியவாத கட்சியினருக்கும் இடையே பல இடங்களில் மோதல்கள் ஏற்பட்டன.

பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும், நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டும் கூட்டத்தைக் கலைத்தனர். இந்த மோதலில், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொல்லப் பட்டுள்ளார். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.